**05.11.2024**

**O.S.No. 61/2023**

**வா.சா.1 : ராமசந்திரன்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-**

1) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சி கூண்டில் சத்தியபிரமாணம் செய்து விட்டு பொய் சாட்சியம் அளித்தால் 7 வருடம் தண்டனை தரக்கூடிய குற்றம் என்பது தெரியும். பிரதிவாதி ரிக் வண்டிக்கு வேலைக்கு சென்றபிறகு, பிரதிவாதியின் அண்ணன் சொத்து பத்திரத்தை கணேசன் என்பவரிடம் கொடுத்து வைத்திருந்தார் என்றால் அந்த விவரம் தெரியாது.

2) பிரதிவாதி சக்திவேல் வெளி மாநிலத்தில் இருந்து திரும்பியதும் படிப்பு அறிவு இல்லாத பிரதிவாதியை அழைத்து சென்று என்னிடம் மேலும் பணம் வாங்கி தருவதாக சொல்லி அதற்கு ஆதரவாக ஆவணங்கள் எழுதி வாங்க வேண்டும் என்று அழைத்து சென்று மோசடியாக பிரதிவாதியை ஏமாற்றி பத்திரம் எழுதி வாங்கிகொள்ளப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) எனக்கும் பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றும் கணேசன் என்பவரின் பினாமியாக செயல்பட்டுவருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கணேசன் என்பவர் வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒரு சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1

ஆனது பிரதிவாதி சக்திவேலுக்கு கடனுக்கு ஆதராமாக எழுதி வாங்கப்பட்ட பத்திரம் என்று சொல்லி என்று எழுதி வாங்கப்பட்டதால் மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல.

4) மேற்படி ஆவணம் கடனுக்காக எழுதப்பட்டது என்பதால் நானும் கணேசனும் கிரைய பத்திரம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் பிரதிவாதியை அழைக்கவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதே போல் பிரதிவாதி சக்திவேல் வா.சா.ஆ.1 ஏற்படும் போது தான் எனக்கு பிரதிவாதியை தெரியும் என்றும் அதற்கு முன்பாக தெரியாது என்றால் பத்திரம் எழுதும் போது தான் பிரதிவாதியை தெரியும். அதற்கு முன்பாக தெரிய வேண்டிய அவசியம் இல்லை.

கூடுதல் ஆவணம் குறியீடு செய்வது சம்பந்தமாக பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Subordinate Judge, Attur.**